**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**IA.NO. 06 / 2023**
**IN**
**MCOP.NO. 38 / 2022**

Deposition of PW - 1 Petitioner / Respondent solemnly affirmed by Thiru.T.Shanmugam, Bench Clerk Grade-II of this court on 07.02.2024 in accordant with provisions of XLIV of 1989.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுரேஷ் | Age | : | 36 |
| Father's Name | : | சண்முகம் | Village | : | திருச்சி |
| Caste | : | | Taluk | : | திருச்சி |
| Calling | : | முதுநிலை மேலாளர் | Religion | : | இந்து |

**முதல் விசாரணை**

நான் திருச்சி, தில்லை நகர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் முதுநிலை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையை பெற்று சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள தேவிப்பிரியா என்பவர் எங்கள் வங்கியில் சேமிப்புக்கணக்கு எண்.009001000025042 வைத்துள்ளார். அவருக்கு நாங்கள் காசோலை புத்தகம் வழங்கியுள்ளோம். வங்கிக்கணக்கு தொடங்கும் போது அவருடைய மொபைல் எண், ஆதார் எண் ஆகியவை பெறுவதுண்டு என்றால் சரிதான். அவர் வங்கிக்கணக்கு தொடங்கிய தேதி 05.05.2012 ஆகும். தற்போது வரை அந்த வங்கிக்கணக்கு நடைமுறையில் தான் உள்ளது. 9345414345 என்பது தேவிப்பிரியாவின் அலைப்பேசி எண்ணாகும். காசோலை வசூலுக்கு செலுத்தப்பட்டாலோ அல்லது பணம் இல்லை என்று திருப்பப்பட்டாலோ, வங்கிக்கணக்கில் பணம் வரவு வைக்கப்பட்டாலோ அந்த செல்போனிற்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும். என்னிடம் காட்டப்படும் காசோலை தேவிப்பிரியாவிற்கு எங்கள் வங்கியில் இருந்து கொடுக்கப்பட்டது **தான் அது ம.சா.ஆ. 1**. 22.03.2021 அன்று காசோலை வசூலுக்கு வந்தது. அந்த காசோலை போதிய பணம் இல்லை என்ற காரணத்தினால் அதே தேதியில் திருப்பப்பட்டுவிட்டது. அந்த தேதியில் அவருடைய வங்கிக்கணக்கில் ரூ.3881.51/- இருந்தது. மேற்படி வங்கிக்கணக்கிற்கான கணக்கீட்டு

**தாள் - சா.சா.ஆ.1**. மேற்படி தேவிப்பிரியாவிற்கு காசோலை வசூலுக்காக வந்த போதும், அதே தேதியில் திருப்பப்பட்ட செய்தி குறித்தும் குறுஞ்செய்தி அனுப்பப்பட்டிருக்கும். வங்கிக்கணக்கில் போதிய பணம் இல்லாமல் காசோலை கொடுத்ததால் ரூ.177/- பிடிக்கப்பட்டுள்ளது. இது குறித்தும் அவருக்கு குறுஞ்செய்தி அனுப்பபட்டிருக்கும்.

**<u>எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.

(ஓம்.சி.ராஜலிங்கம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
கரூர்.